1975 மார்ச் 6]

(உ) நல்ல தரமான திராட்சைப் பதியன்கள் அரசு நாற்றங்கால் களில் தயார் செய்யப்பட்டு தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப் படுகிறது. வேளாண்மைத் துறையினரால் திராட்சை சாகுபடி பற்றிய தொழில் நுணுக்கங்கள் பயிரிடுவோருக்கு வழங்கப்படுகிறது.

(எ) (1) பன்னீர் திராட்சை.

(2) பச்சை திராட்சை.

(3) பங்களூர் நீலம்.

(4) தாம்சன் விதையற்ற திராட்சை.

(5) அனுப்-இ-ஷாயி.

இணைப்பு IV

[27-ம் பக்கத்தில் 219-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) & (இ) கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அரிசன காலனிகளில் நில ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கும் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம்—

(1) புதூர் :—நில உரிமைபெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு அரசின் வாலாய ஆணை எண் 701, சமூக நலத் துறை, நாள் 10—5—74-ல் ஏற்கப்பட்டு, 5—6—74 தேதியில் தமிழ்நாடு அரசிதழ், பாகம் 2, பிரிவு 2, பக்கம் 29-ல் வெளியிடப்பட்டுள்ளது. சைதாப் பேட்டை அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து நிலத்தின் முன் மதிப்பீட்டிற்கான அறிக்கை எதிர்பாசுபிப்படுகிறது.

(2) பெரிய புலியூர் :—அவார்டு நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

(3) பழைய கும்முடிப்பூண்டி :— நிலத்தின் முன் மதிப்பீடு அறிக்கையின் மீது காஞ்சிபுரம் மாவட்ட நல அலுவலர், ஆர்சிதம் செய்யப்படும் நிலத்தை பார்வையிட்டு அவரது அறிக்கை அனுப்பு மாறு மாவட்ட ஆட்சியாளரால் கேட்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை மாவட்ட ஆட்சியாளரால் எதிர்பார்க்கப்படுகிறது.

(4) இராக்கம்பாளையம் :—சைதாப்பேட்டை, அரிசன நலத் தனித் தாசில்தாரிடமிருந்து, நில உரிமை பெறும் மத்திய அரசு சட்டத்தின் (1894-ம் ஆண்டில் முதலாம் சட்டம்) பிரிவு 4(1) முன் மொழிவு வரைவு சமீபத்தில் மாவட்ட ஆட்சியாளருக்குக் கிடைத் துள்ளது. ஆர்சிதம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலம் நஞ்சை நிலமாக இருப்பதால் காஞ்சிபுரம் மாவட்டம் நல அலுவலர் அந்த நிலத்தைப் பார்வையிட்டு அவரது அறிக்கை அனுப்புமாறு கேட்கப் பட்டுள்ளது. அவரது அறிக்கை கிடைக்கப்பெற்றதும் பிரிவு 4 (1) முன்மொழிவு வரைவு அரசுக்கு அனுப்பப்படும் என மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

(5) குருவி அகரம் :—நிலத்தின் முன் மதிப்பீட்டிற்கான அறிக்கை யின் மீது மாவட்ட ஆட்சியாளர் ஆர்சிதம் செய்ய தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நிலத்தை பார்வையிட்டு ஓர் அறிக்கை அனுப்புமாறு மாவட்ட நல அலுவலரைக் கேட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(6) செந்தில்பாக்கம் :—நில ஆர்சிதம் செய்ய எவ்வித செயற் குறிப்பும் இல்லை.

பெரிய ஒபுலாபுரம் நத்தம், பெட்டிகுப்பம் புதிய கும்மிடிபூண்டி கீழ்மடலம் பேடு நெல்வாய்	நில ஆர்சிதம் செய்ய எவ்வித செயற் குறிப்பும் பரிசீலனையில் இல்லை. எனினும், சைதாப்பேட்டை அரிசன நல தனி தாசில்தார் அவற்றிற்கான முன்மொழிவு செயற்குறிப்புகளை அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்—

(1) நெய்வேலி :—அரிசன நல தனித் தாசில்தார், நிலத்திற்கான முன் மதிப்பீடு பட்டியலை அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(2) பூரிவாக்கம் :—திருவள்ளூர் அரிசன நல தனித் தாசில்தா ரிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிலத்தின் முன் மதிப்பீடு பட்டியல் சரியின்மையால் திருத்தி அனுப்புமாறு அவருக்கே அனுப்பப் பட்டுள்ளது. அவரது அறிக்கை எதிர்பாக்கப்படுகிறது.

(3) செஞ்சியகரம் :—தமிழ்நாடு குடியிருப்பு சட்டத்தின் கீழ் வீட்டுமனை பட்டாக்கள் வழங்குமாறு, திருவள்ளூர் கோட்டாட்சித் தலைவர் பணிக்கப்பட்டுள்ளார்.

1975 மார்ச் 6]

(4) மாம்பள்ளம் :—நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு திருவள்ளூர் அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து எதிர்பாக்கப்படுகிறது.

(5) செங்கரை
(6) கன்னிகைபேர்

தாரிடமிருந்து நிலத்தின் மதிப்பீடு திருவள்ளூர் அரிசன நல தனி தாசில் பட்டியல் எதிர்பார்க்கப்படுகிறது.

(7) திருநிலை:—திருவள்ளூர் அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து, நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு சமீபத்தில் கிடைத்துள்ளது. அது அரசுக்கு விரைவில் அனுப்பப்படும் என மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

(8) வச்சிவாக்கம் :—அவார்டு நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

(9) காசிரெட்டிப்பேட்டை
(10) ஆலப்பாக்கம்

திருவள்ளூர் அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6 விளம்பர வரைவு எதிர்பார்க்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

———